www.Padasalai.Net

**அனுப்புநர்**

ந.லதா,
அரசுத் தேர்வுகள்இயக்குநர்,
சென்னை– 600 006.

**பெறுநர்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண். 013041/எச்.1/2024** **நாள்: 12.11.2024**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள்:** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6 – மார்ச்–2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் – சார்பு.

**பார்வை:** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்:30.08.2024.

------

பார்வையில் காணும் கடிதத்தில் மார்ச்– 2025, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் விவரங்களடங்கிய பட்டியலில் மாணவர்களின் பெயர் சேர்த்தல் (By Transfer) / நீக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 14.09.2024 பிற்பகல் முதல் வாய்ப்பு வழங்கப்பட்டது.

தற்போது மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்ட, மார்ச் – 2025 மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் **14.11.2024 அன்று பிற்பகல் முதல்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in – க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password –ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், +1 Arrear பெயர் பட்டியலினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் **19.11.2024 அன்று பிற்பகல் முதல்** அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in – க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password –ஐ

–2–

www.Padasalai.Net



பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்/இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-
**இயக்குநர்**

**நகல்:**

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) -தகவலுக்காக